முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டு தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2020 யூலை

# (304) நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate & Personal Taxation)

2020-10-04
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):
  1. ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
     *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  2. ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  3. ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  4. *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  5. *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  6. ***செயல் வினைச் சொற்களின் பட்டியல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் பட்டியலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  7. *100 புள்ளிகள்*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**தோமஸ்** என்பவர் ஒரு அவுஸ்திரேலியப் பிரஜை ஆவார். அவர் இலங்கையிலுள்ள வெளிநாட்டுச் சேவை நாடுநர்களுக்கான (clients) முதலீட்டு ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கம்பனியொன்றை கூட்டிணைப்பதற்காக 2018 மே 01 ஆந் திகதி இலங்கைக்கு வந்திருந்தார். வரிமதிப்பாண்டு 2018/19 காலப்பகுதியில் அவருடைய பயண விபரங்கள் பின்வருமாறு:

| **இலங்கைக்கு வருகைதந்த திகதி** | **இலங்கையிலிருந்து சென்ற திகதி** |
|---|---|
| 2018.05.01 | 2018.08.15 |
| 2018.11.15 | 2019.01.20 |
| 2019.03.05 | 2019.03.31 |

**நீங்கள் செய்யவேண்டியது:**

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, 2018/19 வரிமதிப்பாண்டு தொடர்பில் இலங்கையின் வரிவிதிப்பு நோக்கத்திற்காக **தோமஸ்** அவர்களின் வதிவிட அந்தஸ்தை (residence status) **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 02

பெறுமதிசேர் வரி (VAT) என்பது இலங்கையிலுள்ள பிரதான நேரில் வரி ஆகும். வரிவிதிக்கத்தக்க வழங்கல் ஒன்றினைச் செய்கின்ற பதிவு செய்யப்பட்ட ஒரு நபர், அந்த வழங்கலைப் பெறுகின்ற நபரானவர் VAT இற்கு பதிவுசெய்யப்பட்ட நபராக இருப்பின் அவருக்கு வரி விலைப்பட்டியல் (tax invoice) ஒன்றை வழங்குவார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) VAT சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வரி விபரப்பட்டியல் ஒன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் மூன்றினை (03) **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

(b) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான VAT திரட்டினைச் சமர்ப்பிப்பதற்கான உரிய திகதியினைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

தனது வதிவிடத்தில் கணக்கீட்டு நிறுவனம் ஒன்றை முன்னெடுத்துச் செல்லும் **சொய்ஸா** என்பவர், கணக்கீடு, கணக்காய்வு மற்றும் வரி ஆலோசனை சேவைகளை வழங்குகிறார். அவர் தனது சேவை நாடுநர்கள் சார்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடவேண்டியுள்ளது. அவர் தனது வதிவிடத்திற்கும் இந்த இரு திணைக்களங்களுக்குமிடையிலான பயணக் கிரயத்தை அவரது வியாபார வருமானத்திலிருந்தான ஒரு கழிப்பனவாகக் கோரியுள்ளார். எவ்வாறாயினும், உதவி ஆணையாளர் இந்தச் செலவுகளை அனுமதிக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

*“ராஜபக்ஸ எதிர் CIT”* இன் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கமைய வரி நோக்கங்களுக்காக **சொய்ஸா**வின் வியாபார வருமானத்திலிருந்து மேற்படி செலவினங்களைக் கழிக்க முடியுமா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

பட்டயப் பொறியியலாளரான **பெரேரா** ஒரு நிருமாணக் கம்பனிக்காகப் பணியாற்றுகிறார். அவர் தனது வரி ஆலோசகராக உங்களைத் தெரிவுசெய்துள்ளார். **பெரேராவின்** பின்வரும் ஊடுசெயல்கள் வரிமதிப்பாண்டு 2018/19 உடன் தொடர்புபட்டவை ஆகும்:

(1) அவர் பட்டியலிடப்பட்ட கம்பனி ஒன்றிலிருந்து ரூபா 234,000/- பங்கிலாப வருமானமொன்றைப் பெற்றுள்ளார். பங்கிலாப வருமானம் மீது கழிக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி (WHT) ரூபா.32,760/-.

(2) அவர் வர்த்தக வங்கியொன்றில் உள்ள நிலையான வைப்பொன்றிலிருந்து ரூபா 325,000/- வட்டி வருமானத்தைப் பெற்றுள்ளார். கழிக்கப்பட்ட WHT ரூபா 16,250/-.

(3) ஆண்டின் காலப்பகுதியில், அவர் சீட்டிழுப்புப் பரிசொன்றை (lottery prize) வென்றிருந்ததுடன் அதிலிருந்து WHT தொகையாக ரூபா 85,000/- கழிக்கப்பட்டது.

(4) ஆண்டின் காலப்பகுதியில், அவர் மற்றுமொரு தனியார் கம்பனிக்கு ஆலோசனை சேவைகளை வழங்கியிருந்ததுடன் அந்த ஆலோசனைச் சேவைக் கட்டணம் மீது கழிக்கப்பட்ட WHT ரூபா 6,500/-.

(5) அவர் ஹோட்டல் ஒன்றிற்கு வாடகைக்கு விட்டிருந்த ஒரு வீட்டின்மீது ரூபா 1,200,000/- வாடகை வருமானத்தைப் பெற்றிருந்ததுடன் அதன்மீது WHT தொகை ரூபா 120,000/- கழிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுப்பனவும் இறுதி நிறுத்திவைத்தல் கொடுப்பனவுகளாகக் கருதப்பட வேண்டுமா என்பதைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

**பெர்னாண்டோ** என்பவர் **வரையறுக்கப்பட்ட ABC (தனி.) கம்பனியில்** புதிதாக நியமிக்கப்பட்ட கணக்காளர் ஆவார். இக்கம்பனியின் வரிமதிப்பாண்டு 2018/19 இற்கான மதிப்பிடப்பட்ட வருமான வரிப் பரிப்பு ரூபா 900,000/- ஆகும். கம்பனியானது வரிமதிப்பாண்டு 2018/19 இற்கான வருமான வரிக் கொடுப்பனவின் முதலாவது காலாண்டுத் தவணைக் கொடுப்பனவாக ரூபா 300,000/- இனைச் செலுத்தியது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) வரிமதிப்பாண்டு 2018/19 இன் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளுக்கான உரிய திகதிகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) 2 ஆவது காலாண்டுத் தவணைக் கொடுப்பனவாக செலுத்தப்பட வேண்டிய வருமான வரித் தொகையினைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) செலுத்தத் தவறிய வரிகளை வசூலிப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு இருக்கின்ற மூன்று (03) முறைகளை **அடையாளங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 06

**யூப்பிட்டர் புத்தகக் கடை** என்பது இலாப நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்துகொண்டு, **நாமல்** மற்றும் அவரது மூத்த சகோதரர் **கமல்** ஆகியோரால் முன்னெடுக்கப்படுகின்ற ஒரு பங்குடமை ஆகும்.

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின்படி, பங்குடமையின் நிகர இலாபம் ரூபா 3,230,000/- ஆகும்.

(1) நிகர இலாபத்தைப் பெறுகையில் பின்வரும் செலவினங்கள் கழிக்கப்பட்டன:

| | **ரூபா** |
|---|---|
| பங்காளர்களுக்குச் செலுத்திய சம்பளங்கள் | 2,040,000 |
| தேய்மானம் | 240,000 |

(2) **நாமல்** மற்றும் **கமல்** ஆகியோர் அவர்கள் வியாபாரத்தில் காட்டுகின்ற ஈடுபாட்டிற்காக மாதாந்தம் முறையே ரூபா 90,000/- மற்றும் ரூபா 80,000/- இனைச் சம்பளமாகப் பெறுகின்றனர்.

(3) வரிமதிப்பாண்டு 2018/19 இற்கு வருமான வரி நோக்கங்களுக்கான சொத்துக்கள் மீதான மூலதன விடுதொகை ரூபா 360,000/-.

(4) பங்குடமைக் கட்டடத்தின் ஒரு பகுதி பேஸ்ரி சொப் (pastry shop) ஒன்றிற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளதுடன் வாடகை வருமானமாக ரூபா 480,000/- பெறப்பட்டுள்ளது. மேற்படி நிகர இலாபத்தைப் பெறுகையில் அது கவனத்திற்கொள்ளப்பட்டது. வாடகைக்குப் பெற்றவரால் (tenant) நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்காக பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக**:

(a) வரி நோக்கத்திற்காக பங்குடமை வருமானம் (03 புள்ளிகள்)

(b) பங்குடமையால் செலுத்தப்பட வேண்டிய நிறுத்திவைத்தல் வரி (02 புள்ளிகள்)

(c) ஒவ்வொரு பங்காளரினதும் பங்குடமை வருமானத்தின் பங்கு (03 புள்ளிகள்)

(d) ஒவ்வொரு பங்காளருக்கும் கிடைக்கக்கூடிய நிறுத்திவைத்தல் வரி வரவு (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவுசெய்யப்பட்ட கம்பனியான **வரையறுக்கப்பட்ட நேச்சர் லவ்வர்ஸ் (தனி.) கம்பனியானது** தொப்பிகள், கைப்பைகள் போன்ற பொருட்களைத் தயாரிக்கிறது. அவர்களுடைய வாடிக்கையாளர்கள் இலங்கையிலும் அதேபோன்று வெளிநாடுகளிலும் இருக்கின்றனர்.

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள், கம்பனியின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன:

(1) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டு காலப்பகுதியில் நடைபெற்ற விற்பனைகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன:

| | |
|---|---|
| ஏற்றுமதிகள் ( 1 அமெரிக்க டொலர் = ரூபா 180/-) | 34,000 அமெரிக்க டொலர் |
| VAT பதிவுசெய்யப்பட்ட நபர்களுக்கான உள்நாட்டு விற்பனைகள் (VAT தவிர்ந்த) | ரூபா 4,425,000/- |

(2) கம்பனியானது காலாண்டின் காலப்பகுதியில் பின்வரும் உள்ளீட்டு வரிகளைச் செலுத்தியிருந்தது:

| | **ரூபா** |
|---|---|
| ஏற்றுமதிகளுக்காகப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் பொதிசெய்யும் பொருட்களின் இறக்குமதி மீது | 116,000 |
| அலுவலகச் செலவினங்கள் மீது | 38,000 |
| தயாரிப்பில் பயன்படுத்தப்படும் இயந்திரம் ஒன்றிற்கான பழுதுபார்ப்புகள் மீது | 4,800 |
| முகாமைப் பணிப்பாளரால் பயன்படுத்தப்படும் மோட்டார் காருக்கான பழுதுபார்ப்புகள் மீது | 3,000 |

(3) கம்பனியானது காலாண்டின் காலப்பகுதியில் பழைய இயந்திரமொன்றை ரூபா 46,000/- இற்கு விற்பனை செய்தது.

(4) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT ரூபா 26,000/-.

(5) கம்பனியானது மாதாந்த VAT தவணைக் கொடுப்பனவுகளாக ரூபா 250,000/- செலுத்தியுள்ளது.

(நியம VAT வீதம் 15% எனக் கருதுக.)

**நீங்கள் செய்யவேண்டியது:**

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதிசேர் வரியினை (VAT) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியான **வரையறுக்கப்பட்ட ஹாஷ் டிரேடிங் (தனி.) கம்பனியானது** தைக்கப்பட்ட ஆடைகளை இறக்குமதி செய்து அவற்றை மொத்த விற்பனைச் சந்தையில் விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபடுகிறது.

பின்வரும் தகவல்கள் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ஹாஷ் டிரேடிங் (தனி.) கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன:

(1) சகல செலவுகளும் தாக்கல்செய்யப்பட்டு, சகல வருமானங்களும் வரவிடப்பட்டதன் பின்னரான 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முந்திய நிகர இலாபம் ரூபா 64,240,000/- ஆகும். 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் மொத்தப் புரள்வு (turnover) ரூபா 526,200,000/- ஆகும்.

(2) பிற வருமானங்களின் கூறுகள் பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| காணி மீதான வாடகை வருமானம் (மொத்த) | 600,000 |
| தளபாட விற்பனை மீதான இலாபம் | 80,000 |
| | **680,000** |

(3) 2019 மார்ச் 31 இல் ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கிரயம் பின்வருமாறு:

| விபரம் | கிரயம் (ரூபா) | கொள்வனவு ஆண்டு |
|---|---|---|
| கட்டடம் | 8,000,000 | 2015/16 |
| CEO இனால் பயன்படுத்தப்படும் மோட்டார் கார் | 2,680,000 | 2017/18 |
| லொறிகள் | 4,324,000 | 2016/17 |
| அலுவலக உபகரணம் | 1,235,000 | 2018/19 |
| கணினிகள் | 2,875,000 | 2017/18 |
| தளபாடம் | 1,859,000 | 2016/17 |
| கணினி மென்பொருள் | 1,000,000 | 2018/19 |

- கணினி மென்பொருளானது ஆண்டின் காலப்பகுதியில் கம்பனியால் இறக்குமதி செய்யப்பட்டது.
- ரூபா 235,000/- கிரயத்தில் வரிமதிப்பாண்டு 2016/17 காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடமானது 2018 டிசெம்பரில் ரூபா 142,500/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. எவ்வாறாயினும், இந்த விற்பனை மீதான கிரயமானது மேலே தரப்பட்ட மீதியில் சீராக்கம் செய்யப்படவில்லை.

(4) முதலீட்டு ஆதனம்:

வரிமதிப்பாண்டு 2015/16 காலப்பகுதியில் கம்பனியால் காணி ஒன்று ரூபா 10 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது. இந்தக் காணியானது மாதாந்தம் ரூபா 50,000/- வாடகைக்கு 2018 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து கம்பனியொன்றுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

(5) நிருவாகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- ஆண்டிற்கான தேய்மான அறவீடு ரூபா 4,546,000/-.
- சுகவீனமுற்ற மற்றும் தேவையுடைய மக்களுக்காக நிறுவனமயப்படுத்தப்பட்ட பராமரிப்பு ஏற்பாடுகளுக்காகத் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 1,000,000/- நன்கொடையைக் கம்பனி வழங்கியது.
- வரிமதிப்பாண்டு காலப்பகுதியில், சந்தைப்படுத்தல் பணிப்பாளர் வழங்குநர்களைச் சந்திப்பதற்காக சீனாவுக்கு அனுப்பப்பட்டதுடன் அவரது பயணத்திற்காகச் செலவிடப்பட்ட கிரயம் ரூபா 653,000/-.
- ஒரு சட்டச் செலவான ரூபா 52,000/- ஆனது வாடகைக்கு விடப்பட்ட காணியின் உரிமையினைப் பாதுகாப்பதற்காகச் செலவிடப்பட்டது.
- வரிமதிப்பாண்டு 2018/19 இற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 1,432,000/-.

(6) விநியோகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- கம்பனியின் எதிர்காலக் கொள்வனவாளர்களைக் களிப்பூட்டுவதற்காக ரூபா 267,000/- செலவிடப்பட்டது.
- வியாபாரக் கடன்பட்டோர் ஒருவர் தொடர்பான அறவிடமுடியாக் கடன் ரூபா 143,500/- வருமானக் கூற்றிற்கு நேரடியாகப் பதிவழிப்புச் செய்யப்பட்டது. வருமானக் கூற்றிற்குச் மேற்கொள்ளப்பட்ட பொது ஏற்பாடு ரூபா 400,000/-.

(7) பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

- ஆண்டின் காலப்பகுதியில், கம்பனியானது ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கான பணிக்கொடையாக ரூபா 765,000/- இனைச் செலுத்தியுள்ளது.
- கம்பனியானது பின்வரும் கோரிக்கையிடப்படாத (unclaimed) பொருளாதார சேவைகள் கட்டண (ESC) மீதிகளைக் கொண்டிருக்கிறது :

  வரிமதிப்பாண்டு 2017/18 : ரூபா 876,500/-
  
  வரிமதிப்பாண்டு 2018/19 : ரூபா 2,631,000/-
- கம்பனியானது வரிமதிப்பாண்டு 2018/19 இற்கான வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக ரூபா 5,000,000/- இனைச் செலுத்தியுள்ளது.
- கம்பனியானது காணியில் குடியிருப்பவரிடமிருந்து ரூபா 60,000/- பெறுமதியான நிறுத்தி வைத்தல் வரி (WHT) சான்றிதழ்களைப் பெற்றிருந்தது.
- வரிமதிப்பாண்டு 2017/18 இலிருந்து முன்கொணரப்பட்ட நட்டம் (வரி நோக்கங்களுக்காகச் சீராக்கம் செய்யப்பட்ட) ரூபா 3,200,000/-.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

வரிமதிப்பாண்டு 2018/19 இற்காக **வரையறுக்கப்பட்ட ஹாஷ் டிரேடிங் (தனி.) கம்பனியின்** பின்வருவனவற்றை **மதிப்பிடுக**:

(a) வரிமதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்தவேண்டிய மீதி வரி

*(மு.கு.: ஏதேனும் செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

## வினா 09

**ருவான் விஜேசிங்க** என்பவர் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கி ஒன்றில் பிரதம நிதி அதிகாரியாக இணைக்கப்பட்டுள்ள பட்டயக் கணக்காளர் ஒருவராவார். அவர் தனது முதன்மை ஊழிய வெளிப்படுத்தலை கம்பனிக்கு வழங்கியுள்ளார்.

வரிமதிப்பாண்டு 2018/19 இற்கான (இதன் பின்பு 'ஆண்டு' எனக் குறிப்பிடப்படும்) அவரது வருமானம் தொடர்பான பின்வரும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன:

(1) ஊழியத்திலிருந்தான (Employment) வருமானம்:

- மொத்தச் சம்பளம் - மாதாந்தம் ரூபா 200,000/-.
- கம்பனி, சாரதி ஒருவருடன் மின்சாரத்தில் இயங்கும் கார் (160 KW) ஒன்றினை அவருக்கு வழங்கியுள்ளது.
- மாதாந்தம் ரூபா 10,000/- என்ற அவரது ஆயுட் காப்புறுதித் தவணைக்கட்டணமானது தொழில்தருநரால் செலுத்தப்படுகிறது.
- அவர் கட்டாய விடுப்பில் (லீவு) இருந்தபோது, தனது குடும்பத்தினருடன் நுவரெலியாவுக்குச் சென்றிருந்தார். **ருவான்** இனால் செலுத்தப்பட்ட ஹோட்டல் பில் (bill) ரூபா 164,000/- ஆனது தொழில்தருநரால் மீளளிப்புச் செய்யப்பட்டது.
- தொழில்தருநரால் கழிக்கப்பட்ட PAYE தொகை ரூபா 192,440/-.

(2) **ருவான்** தொழில்சார் பரீட்சைகளுக்காக வகுப்புகளை நடத்துகின்ற நிறுவனம் ஒன்றின் உரிமையாளர் ஆவார். **ருவானின்** நிறுவனம் தொடர்பாக, 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வருமான மற்றும் செலவினக் கணக்கின் பொழிப்பு கீழே தரப்படுகிறது:

| செலவுகள் | ரூபா | வருமானம் | ரூபா |
|---|---|---|---|
| ஊழியர்களுக்கான சம்பளங்கள் | 875,000 | வருமானம் - வகுப்புக் கட்டணங்கள் | 3,876,000 |
| விரிவுரையாளர்களுக்கான கட்டணங்கள் | 1,565,000 | | |
| போட்டோபிரதி இயந்திரம் மீதான தேய்மானம் | 65,000 | | |
| நன்கொடை | 250,000 | | |
| மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் | 223,000 | | |
| ஏனைய செலவுகள் | 234,000 | | |
| நிகர இலாபம் | 664,000 | | |
| | **3,876,000** | | **3,876,000** |

- ஆண்டின்போது ரூபா 260,000/- இற்கு போட்டோபிரதி இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. மூலதன விடுதொகைகள் கோரப்படக்கூடிய வேறு தகைமைச் சொத்துக்கள் (qualifying assets) எதுவுமில்லை.
- க.பொ.த. சாதாரண தரத்தில் கல்விகற்கும் மாணவர்களின் கணிதத் திறனை மேம்படுத்து வதற்காக கல்வி அமைச்சுக்கு ரூபா 250,000/- நன்கொடை வழங்கப்பட்டது..
- சகல பிற செலவினங்களும் வரி நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளன.

(3) **ருவான்** அவரது அலுவலகத்திற்கு அண்மையாகவுள்ள ஒரு வாடகை வீட்டில் வசிக்கிறார். அவரது சொந்த வீடு காலியில் இருப்பதுடன் அது மாதாந்த மொத்த வாடகையான ரூபா 45,000/- இற்கு கம்பனி ஒன்றிற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இவ்வீட்டிற்கான சோலைவரி மதிப்பீடு ரூபா 280,000/- ஆகும். சோலைவரி **ருவானால்** 30% இல் செலுத்தப்பட்டது. நிறுத்திவைத்தல் வரி ரூபா 54,000/- ஆனது வாடகை வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டுள்ளது.

(4) **ருவான்** சில முதலீடுகளைச் செய்திருப்பதுடன், ஆண்டின் காலப்பகுதியில் பின்வரும் வட்டி வருமானங்களை அவர் பெற்றிருக்கிறார்.

- திறைசேரி உண்டியல்களிலிருந்து : ரூபா 126,000/-.
- நிலையான வைப்பிலிருந்து : ரூபா 47,500/-. *(நிறுத்திவைத்தல் வரி 5% இல் கழிக்கப்பட்ட பின்னர்)*

(5) 2017 அக்டோபர் 01 இல் ரூபா 50 மில்லியன் கிரயத்தில் ஹோமாகம பிரதேசத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு காணியை **ருவான்** வைத்திருக்கிறார். அவர் இந்தக் காணியை 2019 மார்ச் இல் ரூபா 55 மில்லியனுக்கு விற்பனை செய்ததுடன் அந்தக் காணிக்காக பின்வரும் செலவினங்களை அவர் மேற்கொண்டிருந்தார்:

- 2018 சனவரியில், காணியைச் சுற்றி வேலியிடுவதற்காக ரூபா 825,000/-.
- தரகர் கட்டணம் ரூபா 100,000/-.

(6) ஆண்டின் காலப்பகுதியில், வருமான வரியின் காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகளாக ரூபா 500,000/- இனைச் செலுத்தியிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

வரிமதிப்பாண்டு 2018/19 இற்கு **ருவானுக்காக** பின்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்த வேண்டிய மீதி வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின். (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |